## ஒப்புதல்

இந்தப் படிவத்தில் நீங்கள் வழங்கும் தகவல்களில் உங்கள் தனிப்பட்ட தகவல்களும் அடங்கும். உங்கள் தனிப்பட்ட தகவல்கள் சட்டத்தால் பாதுகாக்கப்படுகின்றன. காமன்வெல்த் தனியுரிமைச் சட்டமும் இதில் அடங்கும்.

உங்கள் தகவல்களைச் சேமிக்க 'தரவுப் பரிமாற்றம்' எனப்படும் தகவல் தொழில்நுட்ப அமைப்பைப் பயன்படுத்துகிறோம். இந்த அமைப்பு ஆஸ்திரேலிய அரசாங்கச் சமூகச் சேவைகள் திணைக்களத்தால் (DSS) நடத்தப்படுகிறது. தரவுப் பரிமாற்றத்தில் சேமிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட தகவல்கள் உங்கள் காரியத்தை நிர்வகிக்கும் நோக்கத்துக்காக மட்டுமே எங்களுக்கு தெரிவிக்கப்படும்.

உங்கள் தனிப்பட்ட தகவல்களை DSS உடன் பகிர்ந்து கொள்ள நீங்கள் ஒப்புதல் கொடுக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பகிர்வதற்கு நீங்கள் ஒப்புதல் கொடுக்கவில்லையென்றாலும், அது நீங்கள் பெறுகின்ற சேவைகளைப் பாதிக்காது. உங்கள் தனிப்பட்ட தகவல்களை DSS உடன் பகிர்ந்து கொள்ள நீங்கள் ஒப்புதல் கொடுத்துவிட்டால், அந்தத் தகவலை எந்த நேரத்திலும் நீக்குமாறு நீங்கள் கேட்டுக் கொள்ள முடியும்.

DSS உங்கள் தரவை அடையாள நீக்கம் செய்துவிடும். அதன் பொருள் என்னவென்றால் உங்களை அடையாளம் காணவைக்கும் அல்லது உங்களை அடையாளப்படுத்தும் தகவல்களை அவர்கள் நீக்கிவிடுவர் (எ.கா. உங்கள் பெயர்).

செயல்திட்ட அளவில் பொதுவான போக்கு எப்படியிருக்கிறது என்பதை அடையாளம் காண, தரவுப் பரிமாற்றத்தில் உள்ள மற்ற வாடிக்கையாளர்களின் தரவுகளுடன் உங்கள் தரவை DSS இணைக்கிறது. கொள்கையை மேம்படுத்துவதற்கும், மானியத் திட்டங்களை நிர்வகிப்பதற்கும், ஆராய்ச்சி மற்றும் மதிப்பீடுகளை நடத்துவதற்கும் இந்தத் தகவல் பயன்படுத்தப்படுகிறது.

அறிக்கைகளைத் தயாரிக்க DSS இந்தத் தரவுகளைப் பயன்படுத்தக்கூடும். இந்த அறிக்கைகள் மற்ற அமைப்புகளுடன் பகிரப்படலாம். இந்த அறிக்கைகளில் உள்ள தரவுகள் அடையாள நீக்கம் செய்யப்பட்டிருக்கும்.

DSS தனியுரிமைக் கொள்கையில் உங்கள் தனிப்பட்ட தகவல்களை DSS எவ்வாறு நிர்வகிக்கும் என்பதைப் பற்றிய கூடுதல் தகவல்களைப் பின்வரும் இணையதளத்தில் நீங்கள் காணலாம்: https://www.dss.gov.au/privacy-policy.

இந்தக் கொள்கை பின்வருவனவற்றை விளக்குகிறது:

- தரவுப் பரிமாற்றத்தில் உங்களைப் பற்றி சேமிக்கப்பட்ட தனிப்பட்ட தகவல்களை எவ்வாறு அணுகுவது
- இந்தத் தகவலை மாற்றுவது அல்லது அகற்றுவது பற்றி நீங்கள் எவ்வாறு கேட்பது
- வெளிநாட்டில் தகவல் பெறுபவர்களுக்கு DSS தனிப்பட்ட தகவல்களை வெளியிடக்கூடிய சூழ்நிலைகள்
- ஆஸ்திரேலிய தனியுரிமைக் கோட்பாடுகளை DSS மீறுவது குறித்து புகார் செய்வது எப்படி மற்றும் உங்கள் புகாரை DSS எவ்வாறு கையாளும்.

| | ஆம் | இல்லை |
|---|---|---|
| தரவுப் பரிமாற்றத்தில் எனது தனிப்பட்ட தகவல்களைச் சேமிக்க நான் ஒப்புதல் அளிக்கிறேன் | ☐ | ☐ |
| தொடர்ந்த ஆராய்ச்சிக்கு, கருத்தாய்வுக்கு அல்லது மதிப்பீட்டுக்கு நான் ஒப்புதல் அளிக்கிறேன் | ☐ | ☐ |